**அக்டோபர் - 6**

**"நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள், மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அளிக்கிறதற்கல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்." - லூக் 9 : 55,56.**

கர்த்தருடைய எல்லா சீஷர்கள் சம்பந்தமாகவும், இவ்விதமாகவே இருக்கிறது. மற்ற ஜனங்களுக்கு விரோதமாகத் தீர்ப்புச் சொல்லி அவர்களை அழிக்கவும், அதே சமயத்தில் தாங்கள் இரக்கம் பெறவும் விரும்புகிற அந்த மாய்மாலமான குணத்தைத் தவிர்க்கவே அவர்கள் தொடர்ந்து கற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் சார்பாக நாம் இந்த குணசீலத்தை அப்பியாசிக்கிற அளவிற்குச் சமமாக நாம் கர்த்தரிடத்திலிருந்து இரக்கத்தை எதிர்பார்க்க வேண்டும் என்பதே. கர்த்தருடைய சட்டம் ல்லோரையும் குற்றஞ்சாட்டவும், கண்டனம் செய்யவும் தயாராக இருக்கிற குற்றங் கண்டுபிடிக்கும் குணம் இருதயத்தின் ஒரு தவறான நிலைமையைத் தெரிவிக்கிறது. அதற்கு எதிராக, எல்லாக் கர்த்தருடைய ஜனங்களும் தங்கள் இருதயங்களை காவல் செய்ய வேண்டும். கிருபையும், நன்மையையும், அன்பும், குணத்தின் தனிப்பொருளாகும். ஆவியின் பிரகாரமான இஸ்ரவேலரிடத்தில் இவைகளைக் காண அவர் விரும்புகிறார். அவைகளில்லாமல் நாம் நீண்டகாலம் அவருடைய பிள்ளைகளாக இருக்க முடியாது. **- Z '04, 43 (R 3315)**

யோவானையும், யாக்கோபையும் போல கர்த்தருடைய அநேக ஜனங்கள், கர்த்தரையும் அவருடைய விவகாரத்தையும் மற்றவர்கள் இகழும்போது, தவறு செய்கிறவர்களின்மேல் தேவனிடத்திலிருந்து அழிவை அழைக்கலாம் போல உணர்ந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நடத்தைக்கும் தங்களுடைய சுவிசேஷத்தின் ஊழியத்துக்கும் ஊடேயுள்ள ஒற்றுமையின்மையை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. உலகத்திற்காக தங்களையே மரண பரியந்தம் பலியிடுவதின் மூலமாக, மரித்துப்போன நிலைமையிலிருந்தும், மரித்துக்கொண்டே இருக்கும் நிலைமையிலிருந்தும், உலகத்தைக் காப்பாற்ற நாட வேண்டியது தங்களுடையது என்று சத்தியத்தின் ஊழியக்காரர் ஞாபகத்தில் வைக்க வேண்டும். ஆகையால் வார்த்தையின் எந்த அர்த்தத்திலாவது, தங்கள் விரோதிகளைப் பழிவாங்கும் விருப்பத்தினால் தங்களுடைய பிரதிஷ்டையின் நோக்கத்தை அவர்கள் செல்லத்தக்கதாகச் செய்யக்கூடாது.

**- P '32, 150.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**உபா 32:35; மத் 1:21; 5:44; 18:11; 20:28; மாற் 10:45; ரோம 12:17,19; 1தெச 5:15; 1பேது 2:23; 3:9; லூக் 19:10; யோவா 3:15-17; 10:10; 12:47; ரோம 3:21-27; 4:24,25;5:6-11; 12:19-21; 2கொரி 5:18-21; எபி 10:30.**

**கோபுர வாசிப்பு : Z '11, 205 (R 4849).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் யேசுவானவரின் மீட்கும் வேலையை அனுபவத்தில் கண்டேனா? எப்படி? அது என்னில் எவ்வாறு கிரியை செய்தது?**